### பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சு

## இலங்கைத் தேயிலைச் சபை

# வெற்றிடங்கள்

**இலங்கையின் தேயிலைத் தொழில்துறையில் ஒழுங்குமுறைப்படுத்தல், அபிவிருத்தி மற்றும் சந்தைப்படுத்தல் மேம்பாட்டு நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காகச் செயற்படும் முன்னணி அரச நிறுவனமான இலங்கை தேயிலைச் சபையின் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கையில் நிலவும் பின்வரும் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்காக, தகைமைகளுள்ள, சுறுசுறுப்பான, ஆர்வமுள்ள மற்றும் விவேகமுள்ள இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.**

## 01. பகுப்பாய்வாளர் பதவி (JM 1-1) - தரம் II - பதவி வெற்றிடங்கள் 02

**பதவி விபரம்**

இலங்கை தேயிலைச் சபையின் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவரின் மேற்பார்வையின் கீழ் தேயிலை மாதிரிகளைப் பகுப்பாய்வு செய்யும் பணிகளை நிறைவேற்றுதல்.

**கல்வி தகைமைகளும் அனுபவமும்**

**வெளிவாரி மற்றும் உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கு:**

(அ) இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து, இரசாயனவியல் அல்லது நுண்ணுயிரியலை (Chemistry / Microbiology) ஒரு பாடமாகக் கற்றுப் பெற்றுக்கொண்ட விஞ்ஞானப் பட்டம் (Science Degree) மற்றும் தகைமைகளைப் பெற்றுக்கொண்ட பின்னர் அரச அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் துறை நிறுவனமொன்றில் குறைந்தது சம்பந்தப்பட்ட துறையில் ஒரு வருட கால அனுபவத்தைப் பெற்றிருத்தல். (ISO 17025 அங்கீகாரம் பெற்ற நிறுவனமொன்றில் பெற்ற அனுபவம் விசேடமாகக் கருதப்படும்).

**தெரிவு செய்யும் முறைமை :-** கட்டமைப்பு ரீதியான நேர்முகத் தேர்வின் மூலம்.

## 02. சந்தை பகுப்பாய்வாளர் பதவி - தரம் II (JM 1-1) - பதவி வெற்றிடம் 01

**பதவி விபரம்**

இலங்கை தேயிலைச் சபையின் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவரின் மேற்பார்வையின் கீழ், இலங்கையின் தேயிலைத் தொழில்துறையை சர்வதேச ரீதியாகவும் உள்நாட்டிலும் மேம்படுத்துவதற்குத் தேவையான தேயிலைத் தொழில்துறை தொடர்பான சந்தைத் தரவுகளைச் சேகரித்தல் மற்றும் பகுப்பாய்வு செய்தல்.

**கல்வி தகைமைகளும் அனுபவமும்**

**வெளியக விண்ணப்பதாரர்கள் :-**

அ) இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து பொருளியல் / சந்தைப்படுத்தல் முகாமைத்துவம் / வர்த்தகம் / வணிக முகாமைத்துவம் / அரச நிர்வாகம் / விவசாயம் ஆகிய பாடங்களுக்கு முன்னுரிமை அளித்து ஒரு பட்டத்தைப் பெற்றிருத்தல் வேண்டும். அத்துடன், பட்டத்தைப் பெற்ற பின்னர் குறைந்தபட்சம் சம்பந்தப்பட்ட துறையில் அரச அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனமொன்றில் ஒரு வருட கால சேவையாற்றியிருத்தல் வேண்டும்.

**உள்வாரி விண்ணப்பதாரர்கள் :-**

(ஆ) இலங்கை தேயிலைச் சபையில் முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம் சாரா) மட்டத்தில் தரம் ஐ இல் குறைந்தபட்சம் 05 வருடங்கள் திருப்திகரமான சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்திருப்பதோடு, அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் சந்தைப்படுத்தல் முகாமைத்துவம் தொடர்பான டிப்ளோமா அல்லது அதற்கு மேற்பட்ட தகைமையைப் பூர்த்தி செய்துள்ள உத்தியோகத்தராக இருத்தல் வேண்டும்.

இப்பதவிக்கு ஆங்கில மொழி அறிவும் கணினித் திறனும் அவசியமாகும்.

தெரிவு செய்யும் முறைமை :- கட்டமைப்பு ரீதியான நேர்முகத் தேர்வின் மூலம்.

## 03. இரகசியச் செயலாளர் JM (1-1) தரம் II - பதவி வெற்றிடம் 01

**பதவி விபரம்**

இலங்கை தேயிலைச் சபையின் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவரின் மேற்பார்வையின் கீழ், பணிப்பாளர் சபைக் கூட்டங்கள் மற்றும் ஏனைய தரப்பினருடனான கூட்டங்களை ஏற்பாடு செய்தல், கூட்டங்களின் கலந்துரையாடல் குறிப்புகளைத் தயாரித்தல் மற்றும் அலுவலகச் செயலாளர் பதவிக்குரிய பணிகளை நிறைவேற்றுதல்.

**கல்வி தகைமைகளும் அனுபவமும்**

**வெளிவாரி விண்ணப்பதாரர்கள் (I அல்லது II):**

I. இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து முதற்பட்டத்தைப் பெற்றிருப்பதோடு, பட்டத்தைப் பெற்ற பின்னர் அரச அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனமொன்றில் இரகசியச் செயலாளர் பதவியில் குறைந்தபட்சம் ஒரு வருட கால அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

II. இலங்கை மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் நிறுவன நிர்வாகம் மற்றும் செயலாற்றுப் பயிற்சி தொடர்பான NVQ 6 தகைமையைப் பெற்றிருப்பதோடு, தகைமையைப் பெற்ற பின்னர் அரச அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனமொன்றில் இரகசியச் செயலாளர் பதவியில் குறைந்தபட்சம் 06 வருட கால அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**உள்வாரி விண்ணப்பதாரர்கள் (I அல்லது II):**

I. மேலேயுள்ள வெளிவாரிப் பிரிவின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல்.

II. இலங்கை தேயிலைச் சபையில் முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம் சாரா) தரம் II பதவியில் குறைந்தபட்சம் சம்பந்தப்பட்ட துறையில் 05 வருடங்கள் திருப்திகரமான சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்திருப்பதோடு, அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் செயலாற்றுப் பயிற்சி தொடர்பான சான்றிதழ் பாடநெறியொன்றைப் பூர்த்தி செய்துள்ள உத்தியோகத்தராக இருத்தல் வேண்டும்.

தெரிவு செய்யும் முறைமை :- எழுத்துப் பரீட்சை மற்றும் கட்டமைப்பு ரீதியான நேர்முகத் தேர்வின் மூலம்.

எழுத்துப் பரீட்சைக்கான பாடங்கள், புள்ளிகள் வழங்கும் முறைமை மற்றும் மொழிமூலம்:

| விடயம் | புள்ளிகளும் நேர ஒதுக்கீடும் | வினாத்தாளின் மொழ |
|---|---|---|
| ✦ மொழித்திறன் | (100 புள்ளிகள்) (½ மணித்தியாலம்) | ஆங்கிலம் |
| ✦ திறன் பரீட்சை | (100 புள்ளிகள்) (45 நிமிடங்கள்) | சிங்களம் / தமிழ் |
| ✦ பதவிக்குரிய விடய அறிவு | (100 புள்ளிகள்) (03 மணித்தியாலங்கள்) | ஆங்கிலம் |

திறன் சோதனைக்கான வினாத்தாள் மொழிமூலத்தை விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிட வேண்டும்.

எழுத்துப் பரீட்சையில் சித்தியடைவதற்கு ஒவ்வொரு பாடத்திற்கும் குறைந்தபட்சம் 40மூ புள்ளிகளையும், முழுப் பரீட்சையிலும் சராசரியாக 50% புள்ளிகளையும் பெற்றிருத்தல் அவசியமாகும்.

**கனிஷ்ட முகாமைத்துவ (துஆ 1-1) பதவிகளுக்கான**

**சம்பள அளவுத்திட்டம் :**

**JM 1-1 : ரூ. 72,650 – 10 x ரூ. 1,360 – 18 x ரூ. 2,040 - ரூ. 122,970** (மாதாந்தம்)

முகாமைத்துவ சேவைச் சுற்றறிக்கை 01/2025 இன் அட்டவணை II இன் படி, ஆரம்ப மாதாந்த சம்பளப் படி ரூ. 58,615/- மற்றும் அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய கொடுப்பனவுகளும் வழங்கப்படும். அதன்படி ஆரம்ப மாதாந்த மொத்தச் சம்பளமாக ஏறக்குறைய ரூ. 83,433/- பெற்றுக் கொள்ள முடியும்.

**வயது எல்லை :-**

22 வயதிற்கு குறையாதவராகவும் 45 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கு இவ்வயது எல்லை பொருந்தாது.

## 04. புலனாய்வு உத்தியோகத்தர் பதவி (MA 5-2) தரம் II - பதவி வெற்றிடங்கள் 03

**பணி விபரம் :-**

அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவரின் வழிகாட்டல் மற்றும் மேற்பார்வையின் கீழ், 1957 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்க மற்றும் 1959 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க தேயிலை கட்டுப்பாட்டுச் சட்டத்தின் ஏற்பாடுகள் மற்றும் 1975 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க இலங்கை தேயிலைச் சபைச் சட்டத்தின் 25 ஆம் பிரிவின் கீழ் நிர்ணயிக்கப்பட்டுள்ள ஒழுங்குவிதிகளுக்கு அமைவாக, தேயிலைத் தொழில்துறையின் அபிவிருத்தி மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் நடவடிக்கைகளுடன் தொடர்புடைய புலனாய்வுப் பணிகளை நிறைவேற்றுதல்.

**கல்வித் தகைமைகள் மற்றும் அனுபவம் :- (வெளிவாரி மற்றும் உள்வாரி விண்ணப்பதாரர்கள்)**

இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து விவசாயம் ∴ தோட்ட முகாமைத்துவம் ∴ தேயிலை தொழில்நுட்பம் மற்றும் பெறுமதி சேர்ப்பு ஆகிய பாடங்களுடன் தொடர்புடைய முதற்பட்டத்தைப் பெற்றிருப்பதோடு, சம்பந்தப்பட்ட துறையில் முதுகலைப் பட்டயப் பாடநெறியொன்றைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

தெரிவு செய்யும் முறைமை :- கட்டமைப்பு ரீதியான நேர்முகத் தேர்வின் மூலம்.

**வலுவூட்டல் உத்தியோகத்தர் (MA 5-2) பதவிகளுக்கான**

**சம்பள அளவுத்திட்டம்:-**

**MA 5-2 : ரூ. 62,310 – 10 x ரூ. 1,360 – 15 x ரூ. 1,670 – 5 x ரூ. 2,040 - ரூ. 111,160** (மாதாந்தம்)

முகாமைத்துவ சேவைச் சுற்றறிக்கை 01/2025 இன் அட்டவணை II இன் படி, ஆரம்ப மாதாந்த சம்பளப் படி ரூ. 51,488/- மற்றும் அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய கொடுப்பனவுகளும் வழங்கப்படும். அதன்படி ஆரம்ப மாதாந்த மொத்தச் சம்பளமாக ஏறக்குறைய ரூ. 74,699/- பெற்றுக் கொள்ள முடியும்.

**வயது எல்லை :-**

22 வயதிற்கு குறையாதவராகவும் 45 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கு இவ்வயது எல்லை பொருந்தாது.

**நன்மைகள்**

- சபையில் தற்போது நடைமுறையிலுள்ள விதிமுறைகளுக்கு அமைவாக மருத்துவ உதவி வசதிகள் வழங்கப்படும்.
- தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள் தமது சம்பளத்தில் 10% ஐ ஊழியர் சேமலாப நிதிப் (EPF) பங்களிப்பிற்காக வழங்க வேண்டும் என்பதுடன், சபை அதற்காக 15% பங்களிப்பினை வழங்கும்.
- சபையானது ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிக்கு (ETF) உத்தியோகத்தரின் சம்பளத்தில் 3% பங்களிப்பினை வழங்கும்.

**பொது நிபந்தனைகள் :-**

- அனைத்து விண்ணப்பதாரர்களும் இலங்கைப் பிரஜைகளாக இருத்தல் வேண்டும்.
- அனைத்து விண்ணப்பதாரர்களும் நாட்டின் எந்தப் பகுதியிலும் பணியாற்றுவதற்குத் தேவையான உடல் மற்றும் உள ரீதியான தகைமைகளைக் கொண்டிருப்பதுடன், சிறந்த ஆரோக்கியத்துடன் இருத்தல் வேண்டும்.
- அனைத்து விண்ணப்பதாரர்களும் நற்பண்புகளைக் கொண்டவர்களாக இருத்தல் வேண்டும்.
- தெரிவு செய்யப்படும் வெளிவாரி விண்ணப்பதாரர்கள் 03 வருட நன்னடத்தைக் காலத்திற்கு உட்படுத்தப்படுவதுடன், பதவியில் உறுதிப்படுத்தப்பட்ட உள்வாரி விண்ணப்பதாரர்கள் ஒரு வருட கால பரீட்சார்த்த காலத்திற்கு உட்படுத்தப்படுவர்.
- தெரிவு செய்யப்படும் அனைத்து வெளிவாரி விண்ணப்பதாரர்களும் உரிய சம்பள அளவுத்திட்டத்தின் ஆரம்பப் படியில் நிலைப்படுத்தப்படுவர்.
- உள்வாரி விண்ணப்பதாரர்கள் உரிய பதவிகளுக்குத் தெரிவு செய்யப்பட்டால், தற்போதுள்ள அரச நிர்வாகச் சுற்றறிக்கை விதிகளுக்கு அமைவாக, உரிய சம்பள அளவுத்திட்டத்தின் உரிய சம்பளப் படியில் நிலைப்படுத்தப்படுவர்.

**விண்ணப்பிக்கும் முறை :-**

அரசாங்கத் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், மாகாண சபைகளில் பணியாற்றும் விண்ணப்பதாரர்கள் தமது நிறுவனத் தலைவர்களின் பரிந்துரையுடன் விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

இவ்வலுவலகத்தில் அல்லது **http://www.srilankateaboard.lk** என்ற இணையதளத்தில் பெற்றுக்கொள்ளப்பட்ட உரிய மாதிரிப் படிவத்திற்கு அமைவாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை, பிறப்புச் சான்றிதழ் மற்றும் தகைமைகள், அனுபவம் தொடர்பான சான்றிதழ்களின் பிரதிகளுடன் 2026 பெப்ரவரி 05 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்குமாறு பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்க வேண்டும். விண்ணப்பங்கள் அடங்கிய உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியைக் குறிப்பிடுதல் வேண்டும்.

**பணிப்பாளர் நாயகம்**

**இலங்கை தேயிலை சபை**

**574, காலி வீதி,**

**கொழும்பு 03.**